இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 23.01.2026

# பியூஸ் கோயல் மறக்கலாமா?

சரிவை நோக்கி மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கும் பா.ஜ.க.வை எப்படியாவது காப்பாற்றலாமா என்ற நோக்கத்தோடு வந்திருக்கிறார் ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல். அவர் நேற்றைய தினம் ஒரு பேட்டி அளித்துள்ளார். “எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் தமிழ்நாட்டுக்கு வழங்கிய நல்லாட்சியை மீண்டும் கொடுப்பதே எங்கள் இலக்கு. அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக உருவாக்கியதை நாம் மறக்க முடியாது” என்று சொல்லி இருக்கிறார் பியூஸ் கோயல்.

அவருக்கு மனச்சாட்சி என்ற ஒன்று இருக்கிறதா? என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது பியூஸ் கோயல் என்ன சொன்னார்? என்ன பேட்டி கொடுத்தார்?

**“இந்திய மாநிலங்களிலேயே தனி மாநிலமாக தமிழ்நாடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே மத்திய அரசால் தொடர்பு கொள்ள முடியாத மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்கவே முடியவில்லை. அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களிடம் பலமுறை பேச முயன்றேன். எந்தப் பலனும் இல்லை. இந்தியாவில் 28 மாநிலங்களில் என்னால் இயல்பாகப் பேச முடியும். ஆனால் தமிழ்நாட்டில் முடியாது. தமிழக மின் துறை அமைச்சர் எல்லாவற்றையும் என்னிடம் கேட்டுவிட்டு, ‘அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்’ என்கிறார். அ.தி.மு.க.வைச் சேர்ந்த எம்.பி.க்கள் யாரும் நாடாளுமன்றத்தில் வாயைக்கூட திறக்க முடியாது. சென்னையில் எழுதித் தரப்பட்ட உரையைத்தான் அவர்கள் அப்படியே வாசிப்பார்கள்” என்று பேட்டி அளித்தவர் பியூஸ் கோயல். இன்று இவர் ஜெயலலிதாவுக்கு ‘போர்ஜரி சர்டிபிகேட்’ கொடுக்கிறார்.**

**2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இங்கே பரப்புரை செய்ய வந்த அமித்ஷா, அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பேசினார். திருச்சியில் பேசிய அமித்ஷா, ஜெயலலிதாவை கடுமையாகத் தாக்கினார். “இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த அரசாங்கம் ஜெயலலிதாவின் அரசாங்கம்தான் என்றார். “ மே 16 ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியை அகற்றுங்கள் என்று மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்” என்று பேசினார்.**

மின்துறை அமைச்சர் பியூஷ் கோயல் உட்பட மூன்று மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்ட செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றிய அவர், “கடனில் சிக்கித் தவிக்கும் மாநில மின் விநியோக நிறுவனங்களுக்கு உதவும் நோக்கில் ‘உதய்’ உள்ளிட்ட மத்திய திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசு ஒத்துழைக்கவில்லை” என்றும் குற்றம் சாட்டினார். அப்போது அருகில் இருந்த அமைச்சர் பியூஸ் கோயல், ‘ஜெயலலிதா யாராலும் அணுக முடியாத முதலமைச்சராக இருந்தார்’ என்று சொன்னார். இது பியூஸ் கோயலுக்கு மறந்து விட்டதா?

- ★ பா.ஜ.க.வுக்குத் தந்து வந்த ஆதரவை ஜெயலலிதா வாபஸ் வாங்கிய அன்று, ‘இன்று இரவுதான் நான் நிம்மதியாக தூங்கப் போகிறேன்’ என்றவர் வாஜ்பாய்.
- ★ ‘அத்வானிக்கு செலக்டிவ் அம்னீஷியா’ என்று சொன்னவர் ஜெயலலிதா.
- ★ ‘மோடியா, இந்த லேடியா?’ என்று கேட்டவர் ஜெயலலிதா. இதையெல்லாம் மறந்து விட்டு ஜெயலலிதா துதிபாட வந்திருக்கிறார்கள் பா.ஜ.க. அமைச்சர்கள். அ.தி.மு.க.வை வைத்து ‘டெபாசிட்’ வாங்கலாமா என்ற நப்பாசை தான் இதற்கு அடிப்படை.

  பெங்களூரு நீதிமன்றத்தில் நான்காண்டு சிறைத்தண்டனையும் - 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட ஜெயலலிதாவின் புகழை பா.ஜ.க. பாடத் தொடங்கியதன் பின்னணி அற்ப அரசியல்தானே?

2020 செப்டம்பர் மாதம் பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோது ஒரு புள்ளிவிபரம் வெளியானது. ‘மாநில தொழில் சீர்திருத்த செயல் திட்டம் - 2029’ அடிப்படையில் எளிதாக தொழில் நடத்துவதற்கான சூழலை மேம்படுத்தும் மாநிலங்களின் தரவரிசைப் பட்டியல் அது. இதில் பதினான்காவது இடத்தில் இருந்தது எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி. இந்தப் புள்ளி விபரங்களை வெளியிட்டவர் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அப்போது உடன் இருந்தவர் தொழில் - வர்த்தக அமைச்சர் பியூஸ் கோயல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி ஆகியோர். இதை பியூஸ் கோயல் மறந்து போனது ஏன்?

வாரிசு அரசியல் பற்றியும் பியூஸ் பேசி இருக்கிறார். வாரிசு அரசியலைப் பற்றி பேசும் தகுதி அவருக்கு இருக்கிறதா?

வேத் பிரகாஷ் கோயல் - சந்திரகாந்தா கோயல் ஆகியோரின் மகனாக மும்பையில் பிறந்தவர் இந்த பியூஷ் கோயல். இவரது தந்தை வேத் பிரகாஷ் கோயல், பிரதமர் வாஜ்பாய் அவர்களது அமைச்சரவையில் 2001 முதல் 2003 வரை கப்பல் போக்குவரத்து அமைச்சராக இருந்தவர். பா.ஜ.க.வின் தேசியப் பொருளாளராக இருந்தவர் இவர். அவர் வழியில் அரசியலுக்குள் நுழைந்தவர்தான் இந்த பியூஸ் கோயல்.

இவரது அம்மா சந்திரகாந்தா கோயலும் அரசியலில் இருந்தவர்தான். மகாராஷ்டிரா சட்டமன்றத்துக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் இவரது தாய். இவர்களால்தான் 2010ஆம் ஆண்டு ராஜ்யசபா உறுப்பினராக ஆனவர் இவர். இத்தகைய பியூஸ் கோயல் தான் குடும்ப அரசியலைப் பற்றிப் பேசுகிறார்.

மாநில உரிமைகளுக்கு எதிராக பியூஸ் கோயல் பேசியதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. அவருக்கு சரியான பாடம் கற்பிக்கும் தமிழ்நாடு!

●●

# தீ பரவட்டும்! வீரவணக்கம்... வெற்றி முழக்கம்!

## உங்களில் ஒருவன் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவில் எந்த இயக்கத்திலும் கிடையாது என்பதை உரக்கச் சொல்லிடும் வகையில், உடன்பிறப்புகளின் திருச்சி வருகையை உங்களில் ஒருவனான நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

ஜனநாயகப் போர்க்கள வீரர்களான உடன்பிறப்புகளுக்கு ஓய்வில்லை. உங்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள உங்களில் ஒருவனான எனக்கு ஓய்வுமில்லை - உறக்கமுமில்லை.

நம் உடன்பிறப்புகள், தேர்தலுக்கான கட்சி அரசியல் வேலைகளை மட்டும் செய்யவில்லை. ஒவ்வொரு குடிமக்களின் ஜனநாயக ஆயுதமான வாக்குரிமையைப் பாதுகாக்கும் பணியையும் களத்தில் நின்று நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அடிக்கடி சொன்னதுபோல, நாம் எதிர்கொள்கின்ற 2026 தேர்தல் களம் ஆரிய - திராவிடப் போரின் மற்றொரு களம். அந்தக் களத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் சமூகநீதி, மத நல்லிணக்கம் - மாநில உரிமைகளை இலட்சியமாகக் கொண்ட கொள்கைக் கூட்டணி வலிமையுடன் களத்தில் நிற்கிறது. தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைக்கும் அரசியல் எதிரிகளையும், அந்த எதிரிகளின் கூலிப்பட்டாளமாகிவிட்ட அடிமைகளையும் எதிர்கொண்டு வெற்றியை உறுதி செய்யும் களம்!

**வீரவணக்கத்துடன் தொடங்கும் கழக உடன்பிறப்புகளின் அணி வகுப்பும் களப்பணியும், 2026 சட்டமன்றத் தேர்தல் நிறைவு பெறும் வரை ஓய்வின்றிச் செல்லட்டும்! தொய்வின்றித் தொடரட்டும்! மகத்தான வெற்றியுடன் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையட்டும்! கழகத்தின் வெற்றி முழக்கம் எட்டுத் திக்கும் ஒலிக்கட்டும்!**

**போர்க்களம் காணும் படை வீரர்கள் தங்களின் நாட்டைக் காத்திட உறுதியேற்பது வழக்கம். ஜனநாயகக் களம் காணும் கழகத்தின் இலட்சிய வீரர்களான உடன்பிறப்புகள், ஜனவரி 25 அன்று மாநிலம் முழுவதும் நடைபெறவுள்ள மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று, தமிழ் இன - மொழி எதிரிகளான பா.ஜ.க.வையும் அதன் அடிமைக் கூட்டணியையும் வீழ்த்திட உறுதியேற்க வேண்டும்!**

உங்களில் ஒருவனான நான், தமிழ் மொழி காத்திடும் அறப்போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளாம் தாளமுத்து - நடராசன் நினைவிடத்தில் வீர வணக்கம் செலுத்தி உறுதியேற்க இருக்கிறேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் நடைபெறும் வீர வணக்க நாள் கூட்டத்தில் உரையாற்றுகிறேன்.

வீரவணக்கத்துடன் தொடங்கும் கழக உடன்பிறப்புகளின் அணிவகுப்பும் களப் பணியும், 2026 சட்டமன்றத் தேர்தல் நிறைவு பெறும் வரை ஓய்வின்றிச் செல்லட்டும்! தொய்வின்றித் தொடரட்டும்! மகத்தான வெற்றியுடன் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையட்டும்! கழகத்தின் வெற்றி முழக்கம் எட்டுத் திக்கும் ஒலிக்கட்டும்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2057
தை 8
22.01.2026

# ‘திராவிட மாடல்’ ஆட்சியே மீண்டும் அமையும்! சட்டப்பேரவையில் முதல்வர் உறுதி!

முதல் பக்கத் தொடர்ச்சி

மகிழ்ச்சி உங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் எதையும் செய்யவில்லை, எதையும் செய்யவில்லை என்று திருப்பி திருப்பி சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

**நாங்கள் வேடிக்கை பார்க்கவில்லை!**

நீங்கள் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதுதான் நான் வைக்கக்கூடிய கோரிக்கை.

இன்னும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. நான் முழுவதையும், நூற்றுக்கு நூறையும் நிறைவேற்றிவிட்டேன் என்று சொல்லவில்லை. இன்னும் ஒன்றிரண்டு சதவீதம் இருக்கிறது. சத்துணவு அமைப்பாளர்கள், அதேபோன்று அங்கன்வாடி அமைப்பாளர்கள் இவர்களையெல்லாம்கூட அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பகுதி நேர ஆசிரியர்களும் ஒரு பக்கத்திலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராட்டங்கள் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், அவற்றையெல்லாம் நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. அவர்களையெல்லாம் அவ்வப்போது அழைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கையை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பதை சிந்தித்து, நிச்சயம் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன் அந்தக் கோரிக்கைகளும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதில் எந்த கவலையும் பட வேண்டாம். அடுத்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சிதான் என்பதை உறுதியுடன் சொல்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## கர்நாடக சட்டப்பேரவையிலும்

# அரசின் உரையைப் புறக்கணித்த ஆளுநர்!

## உச்சநீதிமன்றத்தில் வழக்கு! முதல்வர் சித்தராமையா அறிவிப்பு!

பெங்களூரு, ஜன.23-

கர்நாடக சட்டப்பேரவையில் அரசின் உரையை வாசிக்காமல் ஆளுநர் புறக்கணித்து சென்றது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர பரிசீலித்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் சித்த ராமையா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் செயலில் ஆளுநர்கள் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டு தொடக்கத்திலும் சட்டமன்றத்தில் உரையாற்றும் ஆளுநர்கள், மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையை முழுமையாக வாசிக்காமல், தங்களது சொந்த கருத்துக்களை சேர்த்து உரையாற்றுவதோடு, உரையை முழுமையாக வாசிக்காமல் பாதியில் வெளியேறுவதும் வழக்கமாகி வருகிறது.



தமிழ்நாடு சட்டப்பேரவை கூடியபோது பேரவைக்கு வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி உரையை வாசிக்காமல் வெளியேறினார். கேரள சட்டப்பேரவையிலும், அம்மாநில ஆளுநர் ராஜேந்திர அர்லிகர், மாநில அரசு தயாரித்து கொடுத்த உரையில், ஒன்றிய அரசின் மீது தெரிவித்திருந்த கருத்துகளை படிக்காமல் தவிர்த்து சர்ச்சையை ஏற்படுத்தினார்.

இந்தநிலையில் காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில் ஆண்டின் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடருக்கு வந்த அம்மாநில ஆளுநர் தாவர்சந்த்கெலாட்., பேரவையில் அரசின் உரையை படிக்காமல், அவர் எழுதி வந்த கொண்டு வந்த மூன்று வரிகளை மட்டும் படித்து விட்டு இரண்டு நிமிடத்தில் பேரவையில் இருந்து வெளியேறினார். அப்போது ஆளுநரைக் கண்டித்து காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் முழக்கங்களை எழுப்பினர். இதனால் சட்டப்பேரவையில் பரபரப்பு ஏற்பட்டது.

## சட்டப்பேரவையில்

# ஆளுநர்கள் உரை என்ற நடைமுறையே அர்த்தமற்றது!

## ‘தி இந்து’ நாளேடு விமர்சனம்!

*சென்னை, ஜன. 23 -*

*‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் வெளியிட்ட தலையங்கத்தில், தமிழ்நாடு மற்றும் கேரளாவில் சட்டமன்ற கூட்டத் தொடரில் உரையை வாசிக்காமல் ஆளுநர்கள் வெளியேறியதில் எந்த அர்த்தமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளது. பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மரபின்படி செயல்பட மறுப்பது அனைவரும் அறிந்ததே என்றும் கூறியுள்ளது. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மற்றும் கேரள ஆளுநர் அர்லெகர் ஆகியோர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளின் கொள்கை தொடர்பான உரையை வாசித்து அரசியலமைப்பிற்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.*



THE HINDU

Meaningless formality

The conduct of Governors has undermined their constitutional role

The actions of Tamil Nadu Governor R.N. Ravi and his Kerala counterpart Rajendra Vishwanath Arlekar during their customary Legislative Assembly addresses on January 20 came as no surprise to those who have followed the conduct of Governors in non BJP-ruled States. In Chennai, Mr. Ravi declined to read the speech, which, his office said, had "unsubstantiated claims and misleading statements" to justify his walk out. In the past three years, the Governor has either digressed from the prepared speech or refused to read it out before walking out. In Thiruvananthapuram, Kerala Chief Minister Pinarayi Vijayan corrected the policy address made by the Governor, who, according to Mr. Vijayan, had skipped portions, as cleared by the Cabinet, and made additions. As long-serving Governors, Mr. Ravi and Mr. Arlekar should be aware that it is a

*இந்திய நாடாளுன்ற ஜனநாயகம், பிரிட்டன் நாடாளுமன்ற மாதிரியை அடிப்படையாக கொண்டது என்று குறிப்பிட்டுள்ள தி இந்து தலையங்கம், அந்தநாட்டில் கூட அரசு தயாரித்த உரையை மன்னர் புறக்கணித்ததில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.*

*மாநில அரசுகளின் குரலாக ஆளுநர்கள் செயல்படுவதை தவிர வேறுவழியில்லை என்று முன்னாள் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் குறிப்பிட்டதையும் மேற்கோள்காட்டியுள்ளது. ஆளுநர் ரவியின் தொடர்ச்சியான மரபு மீறல்களால், ஆண்டின் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடரை ஆளுநர் உரையுடன் தொடங்க வேண்டும் என்ற நடைமுறையை நீக்க அரசியலமைப்பில் திருத்தம் செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வைத்த கோரிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் ‘தி இந்து’ நாளேடு தெரிவித்துள்ளது.*

*அரசியலமைப்பின் விழுமியங்களுக்கு மதிப்பளித்து முன்மாதிரியாக திகழ வேண்டுமே தவிர, இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதி ஆளுநர்கள் செயல்படக்கூடாது என்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.*